# நாளின் ஆரம்பம் ஃபஜ்ரா? மஃறிபா?

அபூ அப்தில்லாஹ்

இது பற்றி மனித குலத்திற்கென்றே இறைவனால் இறக்கியருளப்பட்ட இறுதி இறைநூல் அல்குர்ஆன் என்ன கூறுகின்றது என்று வரிசையாக முதலில் பார்ப்போம்!

சூரியன் சந்திரனைப் பிடிக்க முடியாது. இரவு பகலை முந்த முடியாது! (அல்குர்ஆன்: 36:40)

சூரியன் மீதும் அதன் பிரகாசத்தின் மீதும் சத்தியமாக, அதனைத் தொடர்ந்து வரும் சந்திரன் மீதும் சத்தியமாக, பகல் வெளியாகும் போது, அதன் மீதும் சத்தியமாக (அப்பகலை) மூடிக் கொள்ளும் இரவின் மீதும் சத்தியமாக (அல்குர்ஆன்: 91:1-4)

அல்ல ! சந்திரன் மீது சத்தியமாக!

பின்னால் தொடர்ந்து செல்லும் இரவின் மீது சத்தியமாக! (அல்குர்ஆன்: 74:1-4)

அவனே இரவைக் கொண்டு பகலை மூடுகின்றான்; அவ்விரவு பகலை வெகு விரைவாகப் பின் தொடர்கிறது. (அல்குர்ஆன்:7:54)

அவனே இரவைக் கொண்டு பகலை மூடுகின்றான். (அல்குர்ஆன் 13:3)

(மேலும் பாருங்கள்: 89:1-5, 6:96. 2:187, 97:1-5)

முத்தாய்ப்பாக அல்குர்ஆனில் 97ம் அத்தியாயம் அல் கத்ர் நாள் ஃபஜ்ரில்தான் ஆரம்பிக்கிறது என்பதைத் திட்டமாக அறிவிக்கிறது. அது வருமாறு:

அருளாளன் அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்

1. நிச்சயமாக அதை (குர்ஆனை) கண்ணியமிக்க ஒரு நாளில் இறக்கினோம்.
2. கண்ணியமிக்க நாள் என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது?
3. கண்ணியமிக்க நாள் ஆயிரம் மாதங்களை விட மிகச் சிறந்ததாகும்.
4. அதில் வானவர்களும், ஜிப்ரயீலும் தம் இரட்சகனின் கட்டளைப்படி சகல காரியங்களுடன் இறங்குகிறார்கள்.
5. அமைதி நிலவியிருக்கும்; அது விடியற்காலை (ஃபஜ்ர்) உதயமாகும் வரையில் இருக்கிறது.

இந்த 97-ம் அத்தியாயத்தில் முதன் மூன்று வசனங்களிலும் இடம் பெறும் லைலத் என்ற அரபு பதத்திற்கு “லைல்” என்ற பொருளில் இரவு என்றே அனைத்து குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புகளிலும் தவறாக எழுதப்பட்டுள்ளது. பாவம்! இந்த மவ்லவிகளைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னால் இவர்களின் ஆபாக்களான மதகுருமார்களால் “தஷ்ரீக்குல் அஃப்லாக்” என்ற பெயரில் எழுதப்பட்டுள்ள நில இயல் பற்றிய நூலில் பூமி தட்டை, சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்று அபத்தமாக எழுதப்பட்டுள்ளதையே, இன்றைய அறிவியல் உலகிலும் அதில்தான் பரக்கத் இருக்கிறது என்ற மூட நம்பிக்கையில் அரபு மதரஸாக்களில் படிப்பிக்கப்படுகிறது. எனவே இம்மவ்லவிகளுக்கு நாளுக்கும். இரவுக்குமுள்ள அதீத வேறுபாடு தெரிய வாய்ப்பில்லை.

இரவு என்றால் ±12 மணி நேரம் மட்டுமே இருக்க முடியும். மேலும் அவர்களின் தவறான கூற்றுப்படி அந்த இரவு அதிகாலை ஃபஜ்ர் வரை மட்டுமே இருக்கும் என்று 97:5 இறைவாக்குக் கூறுவதால் அது சுமார் ±10.45 மணி நேரமே இருக்கும். பூமி தட்டை என்ற மூட நம்பிக்கையில் இம்மவ்லவிகள் இருப்பதால் “கத்ர்” அவர்கள் இருக்கும் பகுதியில் மட்டுமே இருக்கும் என்ற மூட நம்பிக்கையில் இருக்கிறார்கள். ஆனால் பூமி தட்டை அல்ல; உருண்டை. இவர்கள் இரவில் இருக்கும்போது அவர்கள் பகலில் இருக்கிறார்கள். இவர்கள் பகலில் நுழையும் போது அவர்கள் இரவில் நுழைகிறார்கள். அப்படியானால் இவர்கள் ± 10.45 + 1.15 = ±12.00 அவர்கள் ±12.00 ஆக இரண்டையும் கூட்டினால் அது 24.00 மணி அதாவது ஒரு நாள். இந்த அறிவு கூட அதாவது 97:1-3-ல் வரும் ‘லைலத்’ இரவை அல்ல நாளையே குறிக்கும் என்ற நான்காம் வகுப்பு மாணவனுக்கு இருக்கும் அறிவு கூட இந்த மவ்லவிகளுக்கு இல்லை; அந்தளவு மூடர்களாக இருக்கிறார்கள்.

இன்னும் ஆதாரம் வேண்டுமா? குர்ஆனிலேயே இருக்கிறது. 3:41 இறைவாக்கில் ஒரே சம்பவத்தில் மூன்று நாட்களுக்கு “ஃதலாஃதத்த அய்யாம்” என்று கூறும் அல்லாஹ் 19:10 இறைவாக்கில் அதே மூன்று நாட்களுக்கு ஃதலாஃத லயாலின் என்று லைலத்-ன் பன்மையில் கூறி இருக்கிறான்.

குர்ஆன் 2:51 இறைவாக்கில் “நாம் மூசாவுக்கு நாற்பது நாட்களை வாக்களித்தோம்.........” என்றும்

7:142ல் “நாம் மூசாவுக்கு முப்பது நாட்களை வாக்களித்தோம். பின்னர் மேலும் அதை பத்து (நாட்களைக்) கொண்டு பூர்த்தியாக்கினோம்.....” என்றும் கூறியிருப்பதை இந்த மூளை வரண்ட முல்லாக்கள் நாட்கள் என்றிருப்பதை இரவுகள் என்று மொழி பெயர்த்து 4:44 இறைவாக்குக் கூறுவது போல் மார்க்

மவ்லவிகள் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டிருக்கும் வரை 36:21 படி நேர்வழிக்கு வரவே மாட்டார்கள்!

கத்தை அற்பக் காசுக்கு விற்று வழிகேட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு, அவர்களை நம்பியுள்ள அப்பாவி முஸ்லிம்களையும் வழிகேட்டிலாக்குகிறார்கள்.

தொழுகைகளை, நடுத்தொழுகையைப் பேணிக் கொள்ளுங்கள். அல்லாஹ் வின் முன் உள்ளச்சப் பாட்டுடன் நில்லுங்கள். (2:238) இந்த வசனத்திலுள்ள நடுத்தொழுகை அஸர் என்று, நபி(ஸல்) அவர்களின் மனைவிகள் உட்பட பல நபி தோழர்கள் மிக உறுதியாக அறிவித்துள்ளார்கள். நடுத்தொழுகை அஸர் என்றால் நாளின் ஆரம்பம் ஃபஜ்ர் என்பதில் சந்தேகமுண்டா?

முஸ்லிம்களே 2:186 இறைக்கட்டளைக்கு அடிபணிந்து நீங்கள் இந்த மவ்லவிகளையோ எம்மைப் போன்ற மவ்லவி அல்லாதவர்களையோ நம்பாமல் அல்லாஹ்வையே முழுமையாக நம்பி, 47:24 இறைவாக்குச் சொல்வது போல், உங்களின் உள்ளங்களுக்குப் போட்டிருக்கும் பூட்டைக் கழற்றி எறிந்து விட்டு உள்ளத்தைத் திறந்துச் சிந்திக்க முன்வாருங்கள். மூஸா(அலை) அவர்களுக்கு வெறும் 40 இரவுகள் மட்டுமே கட்டளையிட்டிருந்தால், அவர் வெட்டியாக 40 பகல்களை அம்மலையில் ஏன் கழிக்க வேண்டும்? தினசரி பகல் அல்ல, மூன்று நாட்குக்கு ஒரு பகல் அல்ல, வாரத்தில் ஒரு பகல் மட்டுமாவது, தனது சமூகம் தங்கி இருந்த மலையில் அடிவாரத்திற்கு வந்து கவனித்திருந்தால் சாமிரி புரோகிதன் அவர்களின் சமூகத்தைக் காளைக் கன்றை வணங்க வைத்து வழிகெடுத்து இருக்க முடியுமா? மூசா(அலை) மலையில் பகல் பொழுதை வெட்டியாகக் கழித்து, அவரது சமூகம் வழிகெடக் காரணமாக இருந்ததைக் கடுமையாகக் கண்டிக்காமல் அல்லாஹ் விட்டு வைத்திருப்பானா? சிந்தியுங்கள்! அப்படிச் சிந்தித்தால் அது நாற்பது இரவுகள் மட்டுமல்ல, நாற்பது இரவு+பகல் கொண்ட 40 நாட்கள் என்பதைத் திட்டமாக விளங்க முடியும்.

புரோகித மவ்லவிகள் "ருஃயத்திஹி" என்ற அரபு பதத்திற்கு கண்ணால் பார்ப்பது மட்டுமே என விதண்டாவாதம் செய்து அடம் பிடிப்பது போல், நாம் "லைலத்" என்ற அரபு பதத்திற்கு நாள் மட்டுமே என்று அடம் பிடிக்கவில்லை. 2:187 இறை வாக்கிலுள்ள "லைலத்" என்ற பதம் இரவையே குறிக்கிறது. மேலும் "யவ்ம்" என்ற பதம் பகலும் இர வும் சேர்ந்த ஒரு நாளையே குறிக்கும். அதேபோல் "லைலத்" என்ற பதமும் பகலும் இரவும் சேர்ந்த ஒரு நாளையே குறிக்கும். ஆனால் "அல் யவ்ம் வல் லைலத்" என்று இணைந்து வரும்போது இங்கு யவ்ம் பகலையும், லைலத் இரவையும் குறிக்கும்.

இங்கு அழுத்தமாக எதை வலியுறுத்துகிறோம் என்றால் குர்ஆனில் 2:51, 7:142, 19:10, 97:1,2,3 ஆகிய 6 இடங்களில் வரும் "லைலத்" என்ற பதத்திற்கு நாள் என்று குறிப்பிடாமல் இரவு என்று குறிப்பிடுவது மடைமையிலும் பெருத்த மடைமையாகும். நாங்கள் எல்லாம் அரபு மொழி கற்ற பெரும் மேதைகள் என்று பெருமை பேசும் இம்மவ்லவிகளுக்கு மழைக்குக் கூட மதரஸா பக்கம் ஒதுங்காத ஒரு அவாம்-பாமரன் இப்படி விளக்குவது வேதனையிலும் பெருத்த வேதனையாகும். இம் மவ்லவிகளிடம் காணப்படும் வீண் பெருமை காரணமாக அல்லாஹ்வே அவர்களை குர்ஆன் வசனங்களை விட்டும் திருப்பி விடுகிறான். குர்ஆன் வசனங்களை நேரடியாகக் காட்டினாலும் நம்பி ஏற்கமாட்டார்கள். நேர்வழியை ஏற்கமாட்டார்கள்; கோணல் வழிகளையே தங்களுக்குரிய வழியாக ஏற்பார்கள். (பார்க்க : 7:146) என்று அல்லாஹ் கூறுவதை இவர்கள் மறுத்து நிராகரிக்க முடியுமா?

97:1,2,3 மூன்று இடங்களில் காணப்படும் "லைலத்" பதத்திற்கு 'இரவு' என்ற மூட நம்பிக்கையை விட்டு தவ்பா செய்து 'நாள்' என்ற நன் நம்பிக்கைக்கு இம்மவ்லவிகள் வந்துவிட்டால், நாள் மஃரிபில் அல்ல, ஃபஜ்ரில்தான் ஆரம்பிக்கிறது என்ற சரியான உண்மையான முடிவுக்கு அவர்களால் வர முடியும். எப்படி என்று பாருங்கள்.

ஒரு வட்டச்சுற்றில், சுற்று எந்த இடத்தில் சுற்று ஆரம்பிக்கிறதோ அதே இடத்தில்தான் சுற்று முடியும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. தவாஃப் எங்கு ஆரம்பிக்கிறதோ அங்கு தான் முடிகிறது. சூரியனைச் சுற்றும் பூமி எங்கு ஆரம்பிக்கிறதோ அங்கு தான் முடிகிறது. தன்னைத் தான் சுற்றும் பூமி எங்கு ஆரம்பிக்கிறதோ அங்கு தான் சுற்றை முடிக்கிறது. பூமியைச் சுற்றும் சந்திரன் எங்கு ஆரம்பிக்கிறதோ அங்குதான் முடிக்கிறது. அதேபோல் 97:5 இறைவாக்கு நாள் பஜ்ரில் முடிகிறது என்று கூறுவதால் நாள் பஜ்ரிலேயே ஆரம்பிக்கிறது என்பதை மிக எளிதாக விளங்கலாம்.

இந்த மவ்லவிகளின் நாள் மஃரிபில் ஆரம்பிக்கிறது என்ற கூற்றுப்படி 97:5 இறைவாக்குச் சொல்லும் நாளுக்கு பதிலாக இரவு என்றிருந்தால், வட்டச் சுற்றில் இரவு முடிந்து மீண்டும் இரவு அல்லவா துவங்க வேண்டும்! எப்படிப் பகல் ஆரம்பிக்கிறது என்ற அற்ப அறிவும் இம்மவ்லவிகளுக்கில்லை!

இந்த மறுக்க முடியாத உண்மையை யார் ஏற்றுக் கொள்வார்கள்! 8:2-4, 23:1-11 குர்ஆன் வசனங்களை நீங்களே நேரடியாகப் படித்து விளங்குங்கள். அல்லாஹ் கூறும் இத்தன்மையுடையவர்களே, 2:285, 5:7, 24:51 இறைவாக்குகள் கூறுவது போல் "சமிஃனா வ அத்தஃனா"-"நாங்கள் செவிமடுத்தோம், நாங்கள் வழிபட்டோம்" என்று கூறி இந்த இறைவாக்குகள் நேரடியாகக் கூறுவதை அப்படியே

மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட மவ்லவிகளை 50க்கும் மேற்பட்ட வசனங்கள் கடுமையாக் கண்டிக்கின்றன!

ஏற்று அதன்படி நடப்பார்கள். அதற்கு மாறாக அல்லாஹ்வையும், மறுமையையும் உறுதியாக நம் பாதவர்கள், இவ்வுலகை அதிகமாக நேசிப்பவர்கள் 2:93, 4:46 இறைவாக்குகள் யூதர்கள் சொன்னதாக சொல்கின்றனவே "சமிஃனா வ அசைனா" -நாங்கள் செவி மடுத்தோம் மாறு செய்தோம்" என்று, அதை அப்படியே ஏற்று யூதர்களை அடிக்கு அடி, முழத் திற்கு முழம் பின்பற்றுவீர்கள், அவர்கள் ஓர் உடும் பின் பொந்தில் நுழைந்திருந்தால் நீங்களும் அதில் நுழைவீர்கள் (புகாரீ 3456, 7319, 7320, முஸ்லிம் 5184) என்ற நபி(ஸல்) அவர்களின் கடுமையான எச்சரிக்கையைக் கண்டு கொள்ளாமல் புறக்கணித்து விட்டு யூதர்கள் கி.மு, 383-ல் நடைமுறைப் படுத்திய கண்ணுக்குத் தெரியும் 3-ம் பிறையே 1-ம் பிறை, நாள் மஃறிபில் ஆரம்பிக்கிறது என்ற யூத மதக் கலாச்சாரத்தை அணுவளவும் பிசகாமல் அப்படியே எடுத்து நடப்பவர்களே இம்மவ்லவிகள்.

யூத மதக் கொள்கையை நிலைநாட்ட, நாள் ஃபஜ்ரில் ஆரம்பிக்கிறது என்று நேரடியாகக் கூறும் குர்ஆன் வசனங்கள் அனைத்திற்கும் 33:36 இறை வாக்கை நிராகரித்து சுயவிளக்கம் கொடுத்து 2:159 இறைவாக்குச் சொல்வது போல் அவற்றின் நேரடிக் கருத்துக்களை மறைத்து இருட்டடிப்புச் செய்கிறார் கள். நாளைய அவர்களின் முடிவை 2:161,162, 36:66-68 இறைவாக்குகளை நீங்களே படித்து அறிந்து கொள்ளுங்கள். "லைலத்" இரவு மட்டுமல், நாளுக்கும் வரும், நாள் மஃறிபில் அல்ல; ஃபஜ்ரில் ஆரம்பிக்கிறது என்பதற்குப் பல குர்ஆன் வசனங் களைக் கொடுத்திருக்கிறோம். அத்தோடு நாள் ஃபஜ்ரில் ஆரம்பிக்கிறது என்ற உண்மையைப் பல ஆதாரபூர்வமான ஹதீஃத்களும் வெளிப்படுத்து கின்றன. அவற்றையும் பார்ப்போம்.

உங்களில் ஒருவர் திட்டமிட்டுத் தம் மனை வியை, அடிமையை அடிப்பது போல் அடிக்கிறார். பின்னர் அந்நாளின் ஒரு பகுதியான இறுதியில்-இரவில்-அவளுடன் (பாலுறவுக்காக) அவர் படுக்க நேரலாம். அப்துல்லாஹ் இப்னு ஸம்ஆ(ரழி) புகாரீ (ர.அ.) 4942)

நபி(ஸல்) ரமழானின் கடைசிப் பத்து நாள்களில் இஃதிகாஃப் இருப்பார்கள். நான் அவர்களுக்காக (பள்ளியில்) ஒரு கூடாரம் அமைப்பேன். ஃபஜ்ர் தொழுது விட்டு அதற்குள் நுழைவார்கள்.

ஆயிஷா (ரழி), புகாரி(ர.அ.) 2033

".... உங்களின் (நாளின்) கடைசித் தொழுகை யாக வித்ரை ஆக்கிக் கொள்ளுங்கள்" என நபி(ஸல்) கூறினார்கள். இப்னு உமர்(ரழி) புகாரி(ர.அ.)472

(நாள்களின் இறுதியான) இரவுகளின் கடைசித் தொழுகையாக வித்ரை ஆக்கிக் கொள்ளுங்கள் என நபி(ஸல்) கூறினார்கள்.

இப்னு உமர்(ரழி) புகாரி(ர.அ.)998

பகலிலும், இரவிலும் (ஒரு நாளில்) ஐவேளைத் தொழுகைகள் இருக்கின்றன என நபி(ஸல்) கூறி னார்கள். தல்ஹா இப்னு உபைதுல்லாஹ். புகாரி(ர.அ.) 46

ஹஜ் கிரிகைகளில் 8-ம் நாள் காலை இஹ்ராம் அணிந்து மினாவில் போய் அன்று முழுவதும் தங்கு வது, 9-ம் நாள் காலை மினாவிலிருந்து புறப்பட்டுப் பகல் முழுக்க அரஃபாவில் தங்குவது, சூரியன் மறைந்த பின் அங்கு மஃறிபு தொழாமல் முஜ்தலிபா வந்து அங்கு மஃறிபு இஷா இரண்டையும் சேர்த்து (ஜம்வு) தொழுதுவிட்டு அங்கு இரவு தங்கி, காலை யில் ஃபஜ்ர் தொழுதுவிட்டு மினாவுக்குப் புறப்படல். இவை அனைத்தையும் நடுநிலையோடு படித்து விளங்குகிறவர்கள் நாள் ஃபஜ்ரில் ஆரம்பிக்கிறது என்பதை எளிதாக விளங்க முடியும்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக இதோ ஒரு ஹதீஃத்; படித்துப் பாருங்கள்! நஜ்தைச் சேர்ந்த சிலர் நபி(ஸல்) அவர்களிடம் ஹஜ்ஜைப் பற்றிக் கேட் டனர். அப்போது, ஹஜ் என்பது அரஃபாதான். யாரேனும் முஜ்தலிபாவில் தங்கும் இரவில் பஜ் ருக்கு முன்பாக வந்தால் அவர் ஹஜ்ஜை அடைந்து விட்டார்... (10ம் நாளான பெருநாள் தினத்தின்) ஃபஜ்ருக்கு முன் யார் அரஃபாவை அடையவில் லையோ அவருக்கு ஹஜ் தவறிவிட்டது. ஃபஜ்ருக் குப் பின் வந்தால் அது ஹஜ்ஜாக ஆகாது.

திர்மிதி(து) 814 (மேலும் பார்க்க : 815)

(இந்த ஹதீஃத் நஸாயீ (2966) அபூதாவூது, இப்னு மாஜா, அஹ்மது ஆகிய நூல்களிலும் காணப்படுகிறது)

இந்த மவ்லவிகளின் கூற்றுப்படி நாள் மஃறிபில் ஆரம்பிப்பதாக இருந்தால், அரஃபா 9-ம் நாளின் இரவு முதலில், பின்னர் அரஃபா நாளில் பகல் என்று தான் கொள்ள முடியும். அரஃபாவின் பகல் முடிந்து விட்டால் அவர்கள் கூற்றுப்படி 10ம் நாளின் இரவு ஆரம்பித்து விடுகிறது. ததஜ நவீன இமாம்(?) பீ.ஜை யும் தனது மொழி பெயர்ப்பில் பத்தாம் இரவில் என்று அடைப்புக் குறிக்குள் போட்டிருக்கிறார். ஆனால் 9ம் நாள் அரஃபாவை தவறவிட்டவர், 10ம் நாள் இரவில் அரஃபாவை அடைந்தால் அவருக்கு எப்படி ஹஜ் கூடும் என்ற சாதாரண பாமரன் அறிவும் இந்த மவ்லவிகளுக்கு இல்லை.

உண்மை என்ன? நாள் மஃறிபில் ஆரம்பிக்க வில்லை. ஃபஜ்ரில் ஆரம்பிக்கிறது. அரஃபா நாள் துல்ஹஜ் 9 அதிகாலை பஜ்ரில் ஆரம்பித்து 24 மணி நேரத்திற்குப் பின் பஜ்ரில் முடிந்தால் மட்டுமே, அரஃபா பகலைத் தவறவிட்டவர், அரஃபா நாளின் இரவில் அரஃபா மைதானத்தை அடைந்தாலும் அவ ரது ஹஜ் நிறைவேறுகிறது. இந்த சாதாரண பாமரன் அறிவும், மெத்தப் படித்த மேதைகள் என பெருமை பேசும், ஆணவம் கொள்ளும் இந்த மவ்லவிகளுக்கு இல்லை என்பது தான் வேதனைக்குரிய விஷயம்.

(பார்க்க : 7:146)

மார்க்கத்தை உள்ளது உள்ளபடி அதன் தூய நிலையில் விளங்கி நேர்வழி நடக்க-வெற்றி பெற!

நாள் ஆரம்பிப்பது மாலை மஃறிபில் அல்லவே அல்ல. அதிகாலை ஃபஜ்ரில் என்பதற்கு ஆதாரமாக அதை நேரடியாகச் சொல்லும் குர்ஆன் வசனங்களையும், ஆதாரபூர்வமான ஹதீஃத்களையும் மட்டுமே எடுத்து வைத்துள்ளோம். கையில் மடியில் இருப்பதை 2:174-176, 6:116, 31:6 இறைவாக்குகளைப் புறக்கணித்து எடுத்து வைக்கவில்லை. இந்த குர்ஆன், ஹதீஃத் நேரடிப் போதனைகள் 51:55 இறைவாக்குக் கூறுவது போல் உள்ளத்தில் ஈமான் உள்ளவர்களுக்கு மட்டுமே பலன் தரும். அதே சமயம் சுமார் 332 இறைவாக்குகளை நிராகரித்து மார்க்கத்தை வயிற்றுப் பிழைப்பாகக் கொண்டவர்கள் 4:140, 6:68, 40:35 இறைவாக்குகளைக் கண்டு கொள்ளாமல், குர்ஆன், ஹதீஃத் ஆதாரமே இல்லாமல் தங்களின் சுய கருத்துக்களைக் கூறி நாள் மஃறிபில் ஆரம்பிக்கிறது என்று மடத்தனமாக விதண்டா வாதம் செய்து 4:44 இறைவாக்குக் கூறுவது போல் அவர்களும் வழிகெட்டு, அவர்களை நம்பி அவர்கள் பின்னால் கண் மூடி வரும் முகல்லிதுகளையும் வழிகெடுத்து நரகில் தள்ளுவார்கள்.

இதோ அவர்களின் முனாஃபிக் தனத்தை-நய வஞ்சகத்தைப் பாருங்கள். 9:34,35, 59:7 இறைவாக்குகள் கூறுவது போல் செல்வங்களை வெளியே செல்லவிடாமல் தடுத்துச் சேமித்து வைப்பவர்கள், அப்படிச் சேமித்து வைத்து ஒரு வருடம் பூர்த்தியானால் அதற்குரிய ஜகாத்தைக் கொடுக்க வேண்டும். அடுத்த வருடமும் அச்செல்வத்தை வெளியே செல்ல விடாமல் தடுத்து வைத்திருந்தால் அதற்குரிய ஜகாத்தைக் கொடுக்க வேண்டும். இப்படி அச்செல்வத்தை வெளியே செல்ல விடாமல் தடுத்து வைத்திருக்கும் காலமெல்லாம் வருடா வருடம் அப்பொருளுக்கு ஜகாத் கொடுக்க வேண்டும். சேமித்து வைக்கும் காலக்கெடு ஒரு வருடம் என்று உமர்(ரழி), அலீ(ரழி) கூறுவது நபி(ஸல்) அவர்கள் சொன்னதாக ஆதாரபூர்வமானதாக இல்லையாம். அவற்றை மார்க்கமாக ஏற்கக் கூடாதாம். அதற்கு மாறாக ஒரு பொருளுக்கு ஒரேயொரு முறை ஜகாத் கொடுத்தால் கடமை முடிந்தது. பின்னர் எத்தனை ஆண்டுகளுக்கு அதை வெளியே செல்லவிடாமல் தடுத்து வைத்திருந்தாலும் அதற்கு ஜகாத் கடமை இல்லை என்று அறிவீனமாக தனது சுய கருத்தைப் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து பிதற்றி வருகிறார் ததஜ நவீன இமாம்(?) பீ.ஜை.

உமர்(ரழி) நபி(ஸல்) அவர்களின் பெண் கொடுத்த மாமனார். அலீ(ரழி) நபி(ஸல்) அவர்களின் மகளை மணமுடித்த மருமகன். நீண்ட காலம் பழகியவர்கள். ஜகாத் கடமையானதிலிருந்து நபி (ஸல்) அவர்கள் ஜகாத்தை எப்படி வசூலித்தார்கள் என்பதை நேரடியாகப் பார்த்தவர்கள்; கலீஃபாக்களாக இருந்து ஜகாத்தை வசூலித்து விநியோகித்தவர்கள். பயிர் அறுவடையானவுடன் 10%, 5% என்று உடனடியாக ஜகாத் கொடுப்பது போல், பொருள் வந்தவுடன் ஜகாத் கடமை இல்லை. சேமித்து வைக்க முற்பட்டால் அதற்குக் காலக்கெடு ஒரு வருடம். அதாவது அவர்கள் பொருளை சேமித்து வைக்கும் காலம் ஒரு வருடம். 2.5% மட்டுமே ஜகாத் கொடுத்த பொருளுக்கே வருடா வருடம் வெளியே செல்ல விடாமல் தடுத்து சேமித்து வைத்திருக்கும் காலமெல்லாம் ஜகாத் கொடுக்க வேண்டும் என்பதை நபி(ஸல்) அவர்கள் தமது வாயால் சொல்லவில்லையாம். அதனால் அதை ஹதீஃத்தாக ஏற்க முடியாது என்று விதண்டாவாதம் செய்யும் பீ.ஜை. பின் எந்த முகத்தோடு நபி(ஸல்) அவர்களது காலத்தில் சிறுவராக இருந்த இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களின் பேரால் சொல்லப்படும் பேரீத்தம்பழம் ஊற வைத்த ஹதீஃத் அல்லாத செய்தியைத் தூக்கிப் பிடித்து நாள் மஃறிபில் ஆரம்பிக்கிறது என விதண்டாவாதம் செய்கிறார்.

அவருக்கு அவரே முரணா? நயவஞ்சகமாகச் செயல்படுகிறார் என்பது புரியவில்லையா? ஜகாத் வருடா வருடம் கொடுக்காத செல்வந்தர்கள் தூக்கி எறியும் எலும்புத்துண்டை நோக்கமாகக் கொண்டு, ஒரு பொருளுக்கு ஒரு முறைதான் ஜகாத் என்ற மடைமைச் சட்டம்.

7:86, 29:29 இறைவாக்குகளை நிராகரித்து, பொதுமக்களின் அத்தியாவசிய உரிமைகளைப் பறித்து, முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதாக வெற்று முழக்கமிட்டு, முழுக்க முழுக்க ஹராமான சாலை மறியல்(ததஜவினரின் கோரிக்கைகள் மறுக்கப்பட்டால் சாலைகள் இயங்க மறுக்குமாம், இது ததஜவினரின் சுவரொட்டி விளம்பரம்) ஆர்ப்பாட்டம், போராட்டம் பந்த், இன்னும் பிற மார்க்க முரணான செயல்பாடுகள் இவை அனைத்தும் ததஜ, சு.ஜ. இளைஞர், இளம் பெண்களைக் கவரும் மூடச் சட்டம்.

இப்படி உலகியல் ஆதாயங்களையும், பேர் புகழையும் குறிக்கோளாகக் கொண்டு, நரகை நிரப்ப இருக்கும் ஒவ்வொரு ஆயிரத்திலும் 999 வழிகெட்டோரைக் கவர்ந்து இழுக்கும் தீய நோக்கோடு, கி.மு. 383ல் யூதர்களால் கற்பனை செய்யப்பட்டு முஸ்லிம் மூட முல்லாக்களால் கடந்த ஆயிரம் வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படும் நாள் மஃறிபில் ஆரம்பிக்கிறது என்ற குர்ஆனுக்கும், ஹதீஃதுக்கும் முற்றிலும் முரணான மூடக் கொள்கையை ததஜ நவீன இமாம்(?) பீ.ஜையும் தூக்கிப் பிடித்து அதை நிலைநாட்டப் படாதபாடு படுகிறார். அவரது தகிடுதத்தங்களை தில்லு முல்லுகளை இதோ பாருங்கள்.

*நாளின் ஆரம்பம் எது? என்று நாகர்கோவில் ரஃபீக் என்பவர் கேட்ட கேள்விக்கு 14 பக்கங்களைப் பாழாக்கி, ஒரேயொரு குர்ஆன் வசனமோ, ஒரேயொரு ஆதாரபூர்வமான ஹதீஃதோ இல்லாமல் மனிதக் கருத்துக்களை மார்க்கத்தில் புகுத்தி, தனது சொத்தை வாதத்தை நிலைநாட்ட முற்பட்டிருக்கிறார் வஹீ மட்டுமே மார்க்கம் என்று மக்களுக்கு உபதேசிப்பவர், 2:44, 61:2,3 இறைவாக்குகளை நிராகரித்து குஃப்ரிலாகி, எப்படி தவ்ஹீத் வாதி, தவ்ஹீத் ஜமாஅத் இவற்றிற்கு குர்ஆன், ஹதீஃத் ஆதாரமே இல்லாத, அம்பட்டன் குப்பைத் தொட்டியில் அவரது கூற்றுப்படியே தூக்கி எறிய வேண்டியதைத் தூக்கிப் பிடிக்கிறாரோ அதே போல் குர்ஆன், ஹதீஃத் ஆதாரமே இல்லாத மனிதக் கருத்துக்களை எடுத்து வைத்து நாள் மஃரிபில்தான் ஆரம்பிக்கிறது என்ற யூதர்கள் கி.மு. 383ல் நடைமுறைப் படுத்தியதை அப்படியே ஜானுக்கு ஜான் முழத்திற்கு முழம் பின்பற்றத் துடிக்கிறார்.*

*கணிப்புக்கும், கணக்குக்கும் வேறுபாடு தெரியாத, இரவுக்கும், நாளுக்கும் வேறுபாடு தெரியாத, லைலுக்கும், லைலத்துக்கும் வேறுபாடு தெரியாத, பார்ப்பதற்கும், கண்ணால் பார்ப்பதற்கும் வேறுபாடு தெரியாத மூடர், திட்டமிட்டு உருட்டல் புரட்டல்கள் செய்து மக்களை வழிகேட்டில் இட்டுச் செல்ல, ததஜ வழிகெட்ட இயக்கத்தின் நவீன இமாம்(?) துடியாய்த் துடிக்கிறார் என்பதற்கு ஆதாரங்கள் இதோ!*

*இப்னு அப்பாஸ்(ரழி) அறிவித்ததாக முஸ்லிம் 3740வது ஹதீஃதாக அவரது 14 பக்கப் பிரசுரத்தின் 3ம் பக்கம் எழுதியிருப்பது வருமாறு :*

*நபி(ஸல்) அவர்களுக்கு (சுவையான நீர் வழங்க) திங்கள்கிழமை இரவு (பேரீச்சம் பழங்கள் போட்டு) பாத்திரத்தில் ஊற வைக்கப்படும். திங்கள்கிழமை பகலிலும், செவ்வாய்க்கிழமை அஸர் வரையிலும் அதை அருந்துவார்கள். மீதமிருந்தால் அதைப் பணியாளுக்கு வழங்குவார்கள். அல்லது கொட்டி விடுவார்கள். அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரழி)*

*நூற்கள் : முஸ்லிம் (3740) அஹ்மத் (2036)*

*ஜகாத்துடைய விஷயத்தில் உமர்(ரழி), அலீ(ரழி) இருவரின் ஹதீஃத்களை மறுக்கும் இவர், நாள் ஆரம்பம் விஷயத்தில் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களின் செய்தியாகச் சொல்லப்படுவதை எந்த அடிப்படையில் எடுக்கிறார். பீ.ஜை யின் முனாஃபிக் தனம் இதில் வெளிப்படுகிறதா? இல்லையா? இதற்கு மேலும் அவரது தில்லுமுல்லு திருகுதாளத்தைப் பாருங்கள்!*

*மேற்படி ஹதீஃத் முஸ்லிமில் 3740ல் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார். முஸ்லிம்(ர.அ.) 3740வது ஹதீஃதை எடுத்துப் பாருங்கள்!*

*அதில் ஜகாத் வசூலிக்கச் சென்றவர் தனக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டதாக ஒரு தொகையை ஒதுக்கியதைக் கண்டித்துள்ள ஹதீஃதே காணப்படுகிறது. பேரீச்சம்பழம் ஊறவைத்த செய்தி அங்கு இல்லவே இல்லை. பின்னர் ஏன் இந்த மாய்மாலம்? ஆம்! அந்த ஹதீஃதை நேரடியாகப் பார்ப்பவர்கள் இவரின் கயவாளித்தனத்தை அறிந்து விடுவார்கள். முஸ்லிம் 4082வது ஹதீஃதாக இடம் பெற்றிருக்கும் ஹதீஃத் இதோ!*

*அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களுக்காக இரவின் ஆரம்ப நேரத்தில் பழச்சாறு ஊற்றி வைக்கப்படும்; காலையில் அதை அருந்துவார்கள். அன்றைய பகல் முழுவதும் அடுத்த இரவும் அடுத்த நாள் பகலிலும், இரவிலும் அதற்கடுத்த பகலில் அஸர் நேரம் வரை அருந்துவார்கள்..... (முஸ்லிம் 4082)*

*இந்த முஸ்லிம் 4082 ஹதீஃதில் இரவை மட்டும் குறிப்பிட "லைல்" என்ற பதம் ஓரிடத்திலும், இரவு பகல் சேர்ந்த நாளைக் குறிப்பிட "லைலத்" என்ற பதமும் இரண்டு இடங்களில் குறிப்பிட்டிருப்பதை அவதானிக்கலாம்.*

*இங்கு அரபியில் "லைலத்" என்றிருப்பதை இரவு என்று மொழிபெயர்த்தால் கதைக் கந்தலாகிவிடும் என்பதால் இரவு பகல் (அது ஒருநாள் என்பதை மறந்து) என்று மொழி பெயர்த்திருக்கின்றனர். அதிலும் பீ.ஜை. செய்துள்ள மோசடி "திங்கள்கிழமை இரவு" என்று இல்லாததைச் சேர்த்து எழுதியுள்ளார். வஹீ மட்டுமே மார்க்கம் என்று வாயளவில் பிதற்றுபவர் (பார்க்க 2:44, 61:2,3) ஹதீஃதில் இல்லாததைத் திருட்டுத்தனமாக ஏன் சேர்த்தார்? அதற்கு பீ.ஜை.க்கு வழிகாட்டி கலீஃபா அல்ல, நபி தோழர் அல்ல. போயும் போயும் ஒரு தாபியீ, கலீஃபாக்களின், நபி தோழர்களின் கருத்தை ஏற்க முடியாது, வஹீ மட்டுமே மார்க்கம் என்று வாயளவில் பிதற்றும் இவர் ஒரு தாபியீயின் சுய கருத்தை ஏற்கும் முனாஃபிக் தனம் புரிகிறதா? இல்லையா? அவரின் முனாஃபிக்-நயவஞ்சகத் தனத்தை 4083 செய்தி அம்பலப்படுத்துகிறது. 4082ல் இப்னு அப்பாஸ்(ரழி) கூறியதாக 'இரவு' என்றிருப்பதை 'திங்கள் இரவு' என்று யஹ்யாபின் உபைத் அல்பஹ்ரானி(ரஹ்) என்ற தாபியீ கூறி இருப்பது பீ.ஜைக்குத் தனது குருட்டு, சொத்தை வாதத்தை நிலைநாட்ட வேதவாக்காகப் போய்விட்டது. அந்தோ பரிதாபம்! மேலும் முஸ்லிம் 4084, 4085 இரு செய்திகளும் மேற்படி ஹதீஃத்களில் திங்கள் இரவு திங்கள் பகல் என்ற கற்பனைக்கு இடமே இல்லை. நாள் ஆரம்பிப்பது பற்றியும் மேற்படி செய்திகள் கூறவில்லை. பேரீச்சம்பழம் ஊறவைத்தால் எத்தனை நாட்களுக்கு மது ஆகமால் பானமாக இருக்கும் என்ற செய்தியையே அறிவிக்*

அல்குர்ஆன் உங்களுக்கு விளங்காது; நாங்களே விளக்குகிறோம் என்று கூறும் மவ்லவிகள்!

கின்றன. இந்த இரண்டு செய்திகளிலும் நாளைக் குறிப்பிட 'யவ்ம்' என்ற பதமே இடம் பெற்றுள்ளது.

ததஜ நவீன இமாம்(?) தனது அப்பட்டமான பொய் வாதத்தை நிலைநாட்ட இந்த 14 பக்கப் பிரசுரத்தில் நபி(ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரத்தில் வராத ஹதீஃதே அல்லாத மார்க்கமாக ஏற்க முடியாத செய்திகளை அடுக்கி இருக்கிறார். அவரது உபதேசத்திற்கும், அவரது செயல்பாட்டிற்குமுள்ள முரண்பாட்டை-முனாஃபிக் தனத்தை அம்பலப் படுத்தியுள்ளார். பலவீனமான ஹதீஃத்களை ஆதாரமாகக் காட்டியுள்ளார். "லைலத்" என்ற அரபு பதத்திற்கு 'நாள்' என்று தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய இடங்களில் 'இரவு' என்று மூடத்தனமாக மொழி பெயர்த்து 4:44 இறைவாக்குக் கூறுவது போல் அவர் வழிகேட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு, அவரது பக்தகோடிகளான முகல்லிதுகளையும் வழிகேட்டில் இட்டுச் செல்கிறார்.

நாள் மஃறிபில் ஆரம்பிக்கிறது என்ற யூத மதக் கலாச்சாரத்தை, முஸ்லிம்களிடையே புகுத்த அவர் எடுத்து வைக்கும் செய்திகளை ஒவ்வொன்றாக விளக்க ஆரம்பித்தால் பக்கங்கள் பாழாவதோடு, அவரை மிகமிகக் கடுமையாக விமர்சிக்கவும் நேரிடும். அந்த அளவு குர்ஆனுக்கும், ஹதீஃதுக்கும் முற்றிலும் முரணான சுய கருத்துக்களை எடுத்து வைத்துத் தனது கண்மூடி பக்தர்களைத் தக்க வைக்கப் பெரும்பாடு படுகிறார். (பார்க்க : 33:36)

உதாரணமாகப் பாருங்கள்.

தெனாவட்டாக எழுதப்பட்டுள்ள அந்த 14 பக்கப் பிரசுரத்தின் 7ம் பக்கம் "தொழுகைகளையும், நடுத்தொழுகைகளையும் பேணிக் கொள்ளுங்கள். அல்லாஹ்விற்கு கட்டுப்பட்டு நில்லுங்கள்." (அல்குர்ஆன் : 2:239) பீ.ஜையின் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பில் 2:238 வது வசனமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. காதியானிகளைப் பின்பற்றி இப்பிரசுரத்தில் 2:239 ஆகக் குறிப்பிட்டுள்ளார். அதுவும் ஓரிடத்தில் மட்டும் 2:239 என்றிருந்தால் தவறுதலாக இடம் பெற்றுள்ளது என நினைக்கலாம். ஆனால் அப்பிரசுரத்தில் மூன்று இடங்களில் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டுள்ளது. 1993லிலேயே சென்ற நூற்றாண்டில் ஒரு காதியானி, இந்த நூற்றாண்டில் ஒரு தொண்டியானியா? என்று நாம் எழுதியது ஞாபகத்திற்கு வருகிறது.

42:21, 49:16 இறைவாக்குகளை நிராகரித்து ஒருவருக்கு ஒருவர் குஃப்ர்-காஃபிர் ஃபத்வா கொடுப்பது பெருங்குற்றம் என்பதை வழிகேட்டில் செல்லும் எந்தப் பிரிவாரும் ஏற்கமாட்டார்கள். 6:153 இறைவாக்குக் கூறும் நேர்வழி செல்லும் ஒரேயொரு பிரிவினர் மட்டுமே முஸ்லிம்கள் அனைவரையும் முஸ்லிம்களாக ஏற்று குர்ஆன், ஹதீஃதுக்கு முரணான அவர்களின் செயல்களைக் கடுமையாக எச்சரித்து வருவார்கள். குஃப்ர் ஃபத்வா கொடுக்க ஒரு போதும் முற்படமாட்டார்கள். நரகை நிரப்பும் ஒவ்வொரு பிரிவினரும் ஒருவருக்கு ஒருவர் காஃபிர் ஃபத்வா கொடுக்கவே செய்வார்கள். அந்த வரிசையில் பீ.ஜை. இதுவரை மற்ற முஸ்லிம்குக்கு முஷ்ரிக், காஃபிர் ஃபத்வா கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் பின்னால் தொழக்கூடாது என்று சட்டம் சொல்லி வருகிறார். இப்போது சு.ஜ.வினர் பீ.ஜைக்கு காஃபிர் ஃபத்வா கொடுத்து அவரை இஸ்லாத்திலிருந்து வெளியேற்றி விட்டதாக அறிவித்துள்ளனர். இரு சாராரும் வழிகேட்டில் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

"இஸ்லாத்தின் ஆதாரம் இறைவனின் வஹீ மட்டுமே" என்று ஊருக்கு உபதேசம் செய்யும் ததஜ நவீன இமாம்(?) பீ.ஜை. மேற்படி பிரசுரத்தின் 7ம் பக்கத்திலிருந்து "நாளின் துவக்கம் பகல் என்று கூறுவோரின் தவறான வாதங்கள்" என்று தவறாகவே தலைப்பிட்டு 12ம் பக்கம் வரை அவர் பிதற்றியுள்ள பிதற்றல்களுக்கு அவர் குர்ஆனிலிருந்தோ, ஹதீஃதிலிருந்தோ ஆதாரம் தரக் கடமைப்பட்டுள்ளார். குர்ஆன் வசனங்களுக்கு 2:213, 16:44,64 மூன்று வசனங்களின் ஆதாரப்படி நபி(ஸல்) அவர்கள் மட்டுமே மேல் விளக்கம் தரக் கடமைப்பட்டுள்ளார்கள்.

உதாரணமாக 2:238 இறைவாக்கு நடுத்தொழுகை பற்றிக் கூறுகிறது. நடுத்தொழுகை அஸர் தொழுகை என்று நபி(ஸல்) விளக்கமளித்துள்ளது பல அறிவிப்புகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாள் ஆரம்பம் பஜ்ர்-அதிகாலை என்பதற்கு பல குர்ஆன் வசனங்களையும், ஹதீஃத்களையும் எடுத்துத் தந்துள்ளோம். 2:238 இறைவாக்கும் அதையே உறுதிப்படுத்துகிறது.

பீ.ஜை. உண்மையில் முஃமினாக இருந்தால் 8:2 முதல் 4 வரை மற்றும் 23:1 முதல் 11 வரை இறைவாக்குகள் கூறுவது போல் அல்லாஹ்வுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, நாள் பஜ்ரிலிருந்துதான் ஆரம்பிக்கிறது என்பதை உறுதிப்படுத்தி எத்தனைப் பக்கங்கள் எழுதட்டும். அவரைப் பாராட்டலாம். ஆனால் அவரின் நிலை என்ன? 2:159லிருந்து 162 வரையுள்ள இறைவாக்குகள் கூறுவது போல் அல்லாஹ் நேர்வழியை, ஆதாரங்களை மனிதர்களுக்கென்றே தெளிவாக விளக்கிய நிலையில், 2:238ல் நடுத்தொழுகை அஸர் என்று கூறுவதால், நாள் ஆரம்பம் பஜ்ர் என்று கூறுவதை மறைத்து சுயவிளக்கம் கொடுத்து, யூத மதக் கலாச்சாரமான நாள் மஃறிபில் ஆரம்பிக்கிறது, 3ம் பிறையே முதல் பிறை என்ற வழிகேட்டை நிலை நாட்ட முற்பட்டுள்ளார். அவ

அல்லாஹ்வை விட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என ஆணவம் பேசுகிறவர்களே!!

ரது வழிகேட்டை குர்ஆனின் நேரடி வசனங்களை எடுத்துக் காட்டியும் தனது தவறை உணர மறுக்கிறார். அவரது நாளைய நிலையை குர்ஆன் 2:159 முதல் 162 வரை நீங்களே படித்து முடிவு செய்யுங்கள்.

பீ.ஜை, 4:140, 6:68,69, 40:35, இறைவாக்குகள் கூறுவது போல் குர்ஆன், ஹதீஃத் ஆதாரமின்றி அல்லாஹ்வின் வசனங்களைப் பற்றி வீண் தர்க்கம் செய்கிறார். அது அல்லாஹ்விடத்திலும், முஃமின்களிடத்திலும் கோபத்தையே அதிகப்படுத்துகிறது. இந்த இறை வாக்குகளை நீங்களே நேரடியாகப் படித்து அவரது உண்மை நிலையை அறியலாம்.

நாளின் துவக்கம் பகல் என்று கூறுவோரின் தவறான வாதங்கள் என்று எழுதியிருப்பதே அவரது அறியாமையையும் ஆணவத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆம்!

கணக்குக்கும் கணிப்புக்கும் வேறுபாடு தெரியாத மூடர், இரவுக்கும் நாளுக்கும் வேறுபாடு தெரியாத மூடர், பார்த்தலுக்கும், கண்ணால் பார்த்தலுக்கும் வேறுபாடு தெரியாத மூடர், லைலுக்கும் லைலத்துக்கும் வேறுபாடு தெரியாத மூடர், அதிகாலைக்கும் (ஃபஜ்ர்) பகலுக்கும் வேறுபாடு தெரியாத மூடர் எனத் தன்னை வெளிக்காட்டியுள்ளார். அல்லது நாளின் துவக்கம் பகல் என்று யார் சொன்னார் அல்லது யார் எழுதியுள்ளார் என்பதை அவர் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டுள்ளார். தவறினால் அவர் வடிகட்டிய மூடரேதான்.

அவரது மூளை வரண்ட நிலையின் ஆழத்தைப் பாருங்கள். சாப்பிடுவது என்றால் வாயால் சாப்பிடுவதுதான். அதேபோல் பார்ப்பது என்றால் கண்ணால் பார்ப்பதுதான் எனப் பிதற்றியுள்ளார். பார்ப்பது என்றால் கண்ணால், உள்ளத்தால், கனவில், தகவலால், ஆய்வால், கணிப்பால், கணக்கால் பார்ப்பது என்பதற்கு குர்ஆனிலேயே நூற்றுக் கணக்கான வசனங்களைக் காட்ட முடியும். வாய் அல்லாத மற்ற உறுப்புகளில் எதைக் கொண்டும் சாப்பிட முடியுமா? ஒரு வேளை அவர் பின்வழியாக சாப்பிடுவார் போலும்(?)

தலைப்பே மூடத்தனமாக இருப்பது போல் அப்பிரசுரம் முழுக்க முழுக்க மூடத்தனமான சுய விளக்கங்களாகவே இருக்கின்றன.

உதாரணமாகப் பாருங்கள் :

"நடு" என்ற பதத்திற்குரிய "உஸ்த்தா" என்ற அரபி பதத்திற்கு அவருடைய அரபு புலமையைக் காட்டி அபூ ஜஹீலைப் பின்பற்றி விதவிதமான அர்த்தங்கள் கொடுத்தும், இறுதியில் அவற்றிலும் திருப்தி அடையாமல் அவரது மனோ இச்சைப்படியுள்ள சுய விளக்கத்தைப் பாருங்கள்! "நபி(ஸல்) அவர்களுக்குத் தொழுகை விண்ணுலகப் பயணத்தில் கடமையாக்கப்பட்ட பிறகு இவ்வுலகத்திற்கு வந்த பின்னர் அவர்கள் சந்தித்த முதல் தொழுகை நேரம் ஸுப்ஹு. எனவே ஸுப்ஹு தொழுகையிலிருந்து கணக்கிடப்பட்டு அஸர் தொழுகை நடுத் தொழுகையாக வருகிறது. நாளின் ஆரம்பம் காலை என்ற அடிப்படையில் வந்ததவை அல்ல. அல்லது நடுத்தொழுகை என்று மொழி பெயர்ப்பதை விட சிறப்பு மிக்கத் தொழுகை என்று பொருள் கொள்ள வேண்டும் என்று பிதற்றியுள்ளார். (பார்க்க : 4:140, 6:68,69, 40:35)

நாள் பஜ்ரில் ஆரம்பிக்கிறது என்பதற்கு நேரடியாகக் கூறும் குர்ஆன் வசனங்களையும் ஆதாரபூர்வமான ஹதீஃத்களையும் ஆரம்பத்திலேயே எடுத்து எழுதியுள்ளோம். அதற்கு மாற்றமான ஒரு கருத்தை இந்த 2:238 வசனத்திற்குக் கொடுப்பதாக இருந்தால் அதை யார் கொடுக்க வேண்டும்? 2:213, 16:44,64 இறைவாக்குகள் படி இறுதித் தூதர் தானே கொடுத்திருக்க வேண்டும்.

அப்படியொரு ஹதீஃதை பீ.ஜை. காட்டுவாரா? இல்லை என்றால் இவரின் நிலை? 2:159-162, 4:140, 6:68, 33:36,66-68, 40:35 இறைவாக்குகளை நீங்களே நேரடியாகப் படித்துப் பார்த்து அவர் எப்படிப்பட்ட வழிகேட்டில் இருக்கிறார் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

அதுவும் இந்த ரமழான் இரவுகளில் "இஸ்லாத்தின் ஆதாரம் இறைவனின் வஹீ மட்டுமே! என ஊருக்கு உபதேசம் செய்தவர் தன்னை மறந்து தனது சுய கருத் துக்களை இஸ்லாத்தில் நுழைக்க முற்படலாமா? 2:44, 61:2,3 இறைவாக்குகள் கூறுவதை அவர் படித்துப் பார்த்ததில்லையா? ஆம்! அவரது வீண் பெருமை அவரை குர்ஆனை விட்டே திருப்பி விடுகிறது. ஒருபோதும் அவர் நேர்வழியை ஏற்க மாட்டார் என்று அல்லாஹ் 7:146 இறைவாக்கில் கூறியுள்ளதை அவரால் பொய்ப்பிக்க முடியுமா? முடியவே முடியாது!

ஆக அவரது சுய கருத்துக்களையும் மனோ இச்சைப்படியும் இந்த 14 பக்கப் பிரசுரத்தில் நிரப்பி இருக்கிறாரே அல்லாமல், குர்ஆன், ஹதீஃத் நேரடியாகக் கூறும் கருத்துக்களை 2:159 இறைவாக்குக் கூறுவது போல் மறைத்து இருட்டடிப்புச் செய்திருக்கிறாரே அல்லாமல் சத்தியத்தை-நேர்வழியை ஏற்கும் நிலையில் பீ.ஜை. இல்லை. அவரது 14 பக்கப் பிரசுரத்தையும் வரி வரியாகப் பக்கம் பக்கமாக விமர்சிக்க முற்பட்டால் இன்னும் கடுமையாக அவரை அடையாளம் காட்ட வேண்டி வரும்.

இந்த லட்சணத்தில் அவரது பிரசுரத்தின் 1ம் பக்கம் இவர்கள் எடுத்து வைக்கும் தவறான வாதங்களுக்கு ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தங்களுடைய

கருத்தில் உண்மையாளர்களாக இருந்தால் நாம் எழுப்பிய கேள்விகளுக்கும், நாம் சுட்டிக்காட்டிய ஆதாரங்களுக்கும் தக்க பதிலை அளித்திருக்க வேண்டும். ஆனால் இவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

நாம் வைக்கும் வாதங்களுக்குப் பதில் சொல்ல முடியாத இவர்கள் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதற்கேற்ப தாங்கள் ஏற்றுக் கொண்ட கருத்தே சரி என்று வரட்டுப் பிடிவாதம் பிடித்து வருகின்றனர்.

இவர்கள் எடுத்துக்காட்டும் செய்திகளுக்கும் இவர்களின் வாதத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்காது. இது மாதிரியான செய்திகளைக் கூறி தானும் குழம்பி பிறரையும் குழப்புவதே இவர்களின் முக்கியமான பணி.

இதைப் படித்தவுடன் எமக்கு 4:112 இறைவாக்குத்தான் நினைவுக்கு வந்தது. அவர் குறிப்பிட்டுள்ளது நூற்றுக்கு நூறு சாட்சாத் பீ.ஜைக்குத்தான் பொருந்தும். தான் செய்யும் தவறுகளை மிக எளிதாக மற்றவர்கள் மீது துணிந்து சுமத்த, அதை உலகம் முழுவதும் அவதூறாகப் பரப்ப அவரின் தறுதலை பக்தகோடிகள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் தான் இப்படிப் பொய் மூட்டைகளை துணிந்து அவிழ்த்து விடுகிறார்.

அவரின் பக்தகோடிகளை தறுதலை பக்தகோடிகள் என்று எழுதுவதை சிலர் ஆட்சேபிக்கலாம். அவர்களுக்கு அவர்களின் எதார்த்த நிலை தெரியாது. அவரின் பக்தகோடிகளை எம்மோடு எந்த நிலையிலும் பேசக்கூடாது, அந்நஜாத்தைப் படிக்கக் கூடாது என்று அவர் தடுத்து வைத்துள்ளார். அதையும் மீறி அவர்களில் சிலர் நம்மிடம் சிக்கினால், நாம் எதுவுமே சொல்லாமல் குர்ஆனை எடுத்து அதில் சில வசனங்களைப் படித்துப் பாருங்கள் என்று சொன்னால், அவர்கள் படிக்க முன்வரமாட்டார்கள். இதை எல்லாம் நாங்கள் பார்க்க வேண்டிய தேவை இல்லை; எங்கள் அண்ணன் சொல்வதே எங்களுக்குப் போதும் என்பார்கள். 9:31 இறைவாக்குப்படி நீங்கள் உங்கள் அண்ணனை ரப்பாக-கடவுளாக்கிறீர்கள். நாளை நரகில் கிடந்து வெந்து கரியாகிக் கொண்டு ஒருவரை ஒருவர் சபிக்க நேரிடும் என்று 33:66,67,68 குர்ஆன் வசனங்களை எடுத்துச் சொன்னால், அவர்கள் சிறிதும் தயக்கமின்றி "எங்கள் அண்ணன் நரகிற்குப் போனால் நாங்களும் அவர் கூட நரகிற்குப் போகிறோம். நீ ஏன் கவலைப்படுகிறாய்" என்று சிறிதும் தயக்கமின்றி கூறும் அவர்கள் தறுதலைகளா? இல்லையா? நீங்களே சொல்லுங்கள்!

அவர் கேட்ட கேள்விகளுக்கு நாம் பதில் தரவில்லை என்று அப்பட்டமான பொய்யைக் கூறி இருக்கிறாரே? இதில் யார் பொய்யன் என்பதை பகிரங்க மேடையில் நேரடியாகப் பேசி முடிவெடுக்க அவர் தயாரா? 1987லிலிருந்து பகிரங்கமாக விடாது அழைத்துக் கொண்டிருக்கிறோம். "நீர் மகா பொய்யன், பரம அயோக்கியன், அவதூறு மன்னன்" என்று குற்றம் சுமத்தி, வாரும் வந்து நீர் நேர்மையாளன் தான் என்று நிரூபியும் என்று அவருக்கே பதிவுத் தபால் அனுப்பினேன். நாம் அவரைக் குற்றம் சுமத்தியிருக்க, அவரது பணியாளைக் குற்றம் சுமத்தி நாம் கடிதம் எழுதியது போல், தறுதலைத் தனமாகக் கடிதம் எழுத வைத்தார். நாம் அவர் மீது சுமத்திய குற்றங்கள் அனைத்தும் உண்மை என்பதையே இது உறுதிப்படுத்துகிறது.

இல்லை! அவர் உண்மையாளர் என்றால் ஒரு பகிரங்க மேடையில் நாமும் அவரும் அமர்ந்து யார் கேள்விக்கு யார் பதில் அளிக்கவில்லை என்பதை நேரடியாக மக்கள் மன்றத்தில் எடுத்து வைப்போம். மக்கள் உண்மை நிலையை அறிந்து கொள்வார்கள். அதாவது யார் பொய்யன் என்பது வெட்டவெளிச்சமாகிவிடும். அவர் வரவேமாட்டார். காரணம் அவர் மகா பொய்யன்! பரம அயோக்கியன்!! அவதூறு மன்னன்!! என்பது அவருக்கே நன்கு தெரியும். அவற்றிற்குரிய ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன என்பதும் அவருக்குத் தெரியும். அதனால் ஒரு போதும் வரமாட்டார். அதற்கு மாறாக அவரது கண் மூடி, தறுதலை பக்தர்களை என்ன சொல்லி ஏமாற்றுவார் தெரியுமா? அபூ அப்தில்லாஹ் மவ்லவி இல்லை. அவருடன் விவாதிப்பதால் பலன் ஒன்றும் ஏற்படாது. அவர் என்னோடு விவாதித்து மக்களிடம் பிரபல்யம் ஆகப் பார்க்கிறார் என்று துணிந்து அண்டப்புளுகைக் கூறுவார். அவரது தறுதலை பக்தர்களும் அதை அப்படியே ஏற்று உலகம் முழுவதும் பரப்பித் திரிவர்.

1986 வரை கிணற்றுத் தவளையாக இருந்த பீ.ஜை.யை உலகுக்கு அறிமுகப்படுத்தியதே, பிரபல்யப்படுத்தியதே அந்நஜாத் பத்திரிகைதான். அவர் இதுவரை ஆக், ஜாக், அதகூ, தமுமுக, ததஜ எனப் பல அவதாரங்கள் எடுத்துவிட்டார். மக்கள் இவரை நஜாத்காரன், என்றும் இவரது பள்ளிகளுக்கும் நமக்கும் அவற்றில் கடுகளவும் சம்மதமோ, தொடர்போ இல்லாத நிலையில் அவற்றை நஜாத் பள்ளிகள் என்றே அழைத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் நாம் அவருடன் விவாதித்துப் பிரபல்யம் ஆகப் பார்க்கிறோம், பேர், புகழ் எடுக்கப் பார்க்கிறோம் என்று பீ.ஜை. சொல்லி அவரது கண் மூடி பக்தர்களை ஏமாற்றி வருகிறார் என்றால், அவர் மகா பொய்யன், பரம அயோக்கியன், அவதூறு மன்னன் என்பது நூற்றுக்கு நூறு உண்மையாகிறதா? இல்லையா? நீங்களே முடிவு எடுங்கள்!

நபி(ஸல்) அவர்களைவிட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என அகந்தை பேசுகிறவர்களே!